Toronto Community Crisis Service

# உங்களுக்குத் தேவையான ஆதரவு, உங்களுக்கு மிக அதிகமாகத் தேவைப்படும்போது.



## இந்த சேவையைப் பற்றி

ரொறன்ரோ சமூக நெருக்கடிகளுக்கான சேவை (TCCS) நடமாடும் நெருக்கடிப் பணியாளர் குழுக்கள் (mobile crisis worker teams) மூலம் இரகசியமான, தனிப்பட்ட மனநல உதவிகளை இலவசமாக வழங்குகிறது. ரொறன்ரோவில் வசிக்கும் 16 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதினருக்கு ஒரு நாளில் 24 மணித்தியாலமும், வாரத்தில் ஏழு நாட்களும் TCCS ஆதரவை வழங்குகிறது.

மனநல நெருக்கடி ஒன்றுக்கான ஆதரவிற்காக நீங்கள் 211 அல்லது 911ஐ அழைக்கும்போது, மனநலம் மற்றும் நெருக்கடிக்குப் பதிலளிக்கும் வகையில் பயிற்சிபெற்ற நெருக்கடிப் பணியாளர்களை TCCS உங்கள் இடத்திற்கு அனுப்புகிறது.

உங்களுக்கு என்ன ஆதரவுகள் தேவைப்படுகின்றன என்பதை அறிந்துகொள்வதற்காக அவர்கள் உங்களுடன் பேசுவார்கள். உங்களது மனநலச் சவால்களுக்கு எவ்வாறு பதிலளிப்பது என்பதற்கான வழிகளைக் கண்டுபிடிப்பதற்கு TCCS உங்களுடன் இணைந்து பணியாற்றும்.

TCCS நெருக்கடிப் பணியாளர்கள் கழுத்தில் அடையாளப்பட்டி அணிந்திருப்பார்கள் மற்றும் அடையாள அட்டைகளைக் கொண்டு செல்வார்கள். அனைத்து TCCS வாகனங்களிலும் சமூகப் பங்காளர் இலச்சினைகளுடன் இணைந்து ரொறன்ரோ நகரசபையின் இலச்சினையும் இருக்கும்,

## செயல்படும் நேரம்

TCCS ரொறன்ரோ நகரம் முழுவதும் 24/7 செயல்படுகிறது. TCCSஐ அணுகுவதற்கு 211ஐ அழைக்கவும்.

**toronto.ca/CrisisService**

**இல் மேலும் அறிக.**

TORONTO